மாகாணக் கல்வித் திணைக்களம் - சப்ரகமுவ

# வரலாறு

## தரம் - 10

அலகு – 2.4

## இலங்கையின் குடியேற்றங்கள்

## மாகாணக் கல்வித் திணைக்களம் - சப்ரகமுவ


தயாரிப்பு

பத்மநாதன் பாரதிராஜா

ஸ்ரீ கதிரேசன் தேசிய கல்லூரி.

தெரணியகலை.

barathijarishan@gmail.com

0779517718


barathijarishan@gmail.com

# இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக்காலக் குடியிருப்புக்கள் ( கி.மு 450- கி.பி 300 )

பண்டைய குடியிருப்புக்களின் பரம்பல் மற்றும் அவை தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதற்கான ஆதாரங்களாக தொல்பொருட்களே விளங்குகின்றன.

பெரும்பாலான ஆரம்ப வரலாற்றுக்காலக் குடியிருப்புக்கள் கிராமியக் குளமொன்றை மையமாகக் கொண்டு அதன் அருகாமையில் அமைந்திருந்தன.



barathijarishan@gmail.com

# ஆரம்பவரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- வருடாந்த மழை வீழ்ச்சி
- மண்ணின் தன்மை
- தரைத் தோற்ற வேறுபாடு
- இயற்கை வளங்களின் பரம்பல்
- நீரோடைகள்



barathijarishan@gmail.com

# ஆரம்பக் காலக் குடியேற்றங்கள் உலர்வலயத்திலேயே பரவியமைக்கான பிரதான காரணம்

வளமான செங்கபில நிறமண் காணப்பட்டமை
தேவையன நீரை இரு வழிகளில் பெற்றுக் கொண்டமை.

- ❖ பருவ மழை.
- ❖ ஆற்றுக்குக்குறுக்கே அணைகளைக் கட்டி சேமித்து நீரை தேவையான இடங்களிற்கு கொண்டு சென்று பயன்படுத்தப்பட்டது.

கணேகந்த, கல்லென விகாரைகளில் காணப்படும் கற்குகைகள் இரண்டிலும் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் அவரண என்ற சொல்லின் பொருள் அணைக்கட்டு ஆகும்.
நதிகளுக்கு அப்பால் ஆரம்பகாலக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமைக்குக் காரணம் வெள்ளப் பெருக்கைக் கட்டிப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவு இன்மையாகும்.



barathijarishan@gmail.com

# ஆரம்ப வரலாற்றுக் காலக் குடியேற்றங்களின் கட்டமைப்பும் தன்மையும்.

ஆரம்ப வரலாற்றுக் காலக் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக் கரையோரங்களுக்கு வெளியே காணப்பட்டதாக கிரிந்தி ஓயா ஆய்வுசெய்த தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.


குளத்தை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றங்கள் வளர்ச்சியடைந்தன.
இவை வாவிகாம என மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
மகாவம்சத்தில் பின்வரும் குளக் குடியிருப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சுமண வாவிகாம
- ஹிந்தரி
- விஹாரவாவிகாம
- கடஹ வாவி காம




barathijarishan@gmail.com

# கிரிந்தி ஓயாக் கரையில் காணப்பட்ட குடியிருப்புக்கள்





# பண்டைய கிராமியக் குடியிருப்புக்கள்






barathijarishan@gmail.com

# பண்டைய கிராமம் ஒன்றின் மாதிரி





barathijarishan@gmail.com

# தொழில் ரீதியாக ஒன்றுபட்டிருந்த வரலாற்றுக் கால குடியிருப்புக்கள்

| கிராமம் | தொழில்கள் |
|---|---|
| கசீகாரகாம | விவசாயிகள் வாழ்ந்த கிராமம். |
| மணிகாரகாம | இரத்தினக்கல் அகழ்வேர் வாழ்ந்த கிராமம் |
| கோபலகாம | இடையர் வாழ்ந்த கிராமம். |
| கேவட்டகாம | மீனவர் வாழ்ந்த கிராமம். |
| கும்பகாரகாம | குயவர் வாழ்ந்த கிராமம். |
| வட்டகீகாம | தச்சர் வாழ்ந்த கிராமம். |







barathijarishan@gmail.com

# காரணகாரிய அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருந்த வரலாற்றுக் காலக் குடியிருப்புக்கள்

| கிராமம் | காரியம் |
|---|---|
| பட்டனகாம | துறைமுகத்தைக் கொண்ட கிராமம் |
| நியம் கம் | வர்த்தக் கிராமம் |
| ஓலகம் | மக்களால் கைவிடப்பட்ட கிராமம் |

barathijarishan@gmail.com

# ஆரம்ப வரலாற்றுக் கால
# கிராம நகர குடியேற்றங்கள்

- நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைப்படுத்தப்பட்டன.
  - 0.15 கெக்டெயர் விடச்சிறய கிராமங்கள்
  - 2 கெக்டெயர் பரப்பளவுடைய மத்தியளவிலான கிராமங்கள்
  - 2 கெக்டெயரை விடப் பெரிய நகரக் குடியிருப்புக்கள் காணப்பட்டன.
- கிராமம் ஒன்றில் 5 - 6 குடும்பங்கள் வசித்தன.
- பெரிய கிராமங்களில் 30 பேர் வரை வசித்தனர்.
- மகாகமவிலும் அதனை அண்மித்த நகரங்களிலும் 35000 பேர் வரை வசித்தனர்.
- வேலியிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட கிராமங்கள் **பரிகித்தகம** என்ற பெயராலும் அவ்வாறு பாதுகாக்கப்படாதவை **அபயகிரித்தகம** எனவும் அழைக்கப்பட்டன.
- 1ம் விஜயபாகு மன்னனின் பனாக்கடுவ செப்புச் சாசனத்தில் " **நுருபுரம்**" என அநுராதபுரம் குறிப்பிடப்பட்டடுள்ளது.



barathijarishan@gmail.com

# ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் நிர்வாக ஒழுங்கமைப்பு

- சில குடும்பங்களைக் கொண்ட ஓர் அலகாக கிராமம் காணப்பட்டது.
- குடும்பத்தைப் பிரதி நிதித்துவப்படுத்திய குடும்பத் தலைவன் **குர்ஹபதி** என அழைக்கப்பட்டான்.
- கிராமத்தின் குடும்பத் தலைவர்களைக் கொண்ட குழுவின் தலைவன் “ **கமிக** அல்லது **கிராமிக** எனப்பட்டான்.
- கிராமத் தலைவர்கள் 10 பேர் கொண்ட சபையின் மூலம் கிராமத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

**களுதிய பொகுண** விகாரைக் கல்வெட்டில் அவ் விகாரைப் பிக்குகளுக்கு தானம் வழங்குவதில் எதும் பிரச்சினைகள் நேர்ந்தால் 10 கிராமப் பிரதானிகள் சேர்ந்து தீர்வு காண வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.




barathijarishan@gmail.com

# ஆரம்ப வரலாற்றுக் கால கிராமிய வீடமைப்பு முறை

வட்ட வடிவினைக் கொண்டதாகவும் சில வீடுகள் சதுரமான தரை அமைப்பைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன.
மண் சுவர்களையும் இலை குழைகளிலான கூரைகளையும் கொண்ட குடிசைகளாக அமைக்கப்பட்டன.
நிலத்தைத் தோண்டி அதன் மேல் மண் பூசி வீட்டின் அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

திஸ்ஸ மகாராமையில் **வலகம்பத்து** எனப்படும் கிராமத்தில் புராதன வீடென்றின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன



அநுராதபுரத்தின் உள்நகர் அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட வட்டவடிவிலான தூண்கள் இட்டிருந்ததற்கான அடையாளம்



barathijarishan@gmail.com

# ஆரம்பவரலாற்றுக்கால மக்களின் சீவனோபாய முறை

நதிப்படுக்கைக்கு அப்பால் குடியிருப்புக்கள் பரவலடையும் போது சேனைப்பயிற்செய்கை பிரதான ஜீவனோபயமாக விளங்குகின்றது. குரக்கன், எள் கரை அரிசி மெனேரி என்பன அங்கு பயிரிடப்பட்டன. சனத்தொகை அதிகரிப்பால் உணவு உற்பத்தி அதிகரிக்க நீர் தேவைப்பட்டது.

எனவே கிராமிய குளங்கள் அமைக்கப்பட்டன.



barathijarishan@gmail.com

# Thank you


Pathmanadhan Baradhiraja

Sri Kathiresan National School.

Deraniyagala

Phone

0779517718

Email

barathijarishan@gmail.com